## ஆயுர்வேத மருத்துவ சபை - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆயுர்வேத மருத்துவ சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகன இலச்சினைகள் விநியோகித்தல் கட்டணமான ரூபா 28,000 இனையும் பெயர்ப்பட்டியல் பிரதியெடுத்தல் கட்டணமான ரூபா 260 இனையும் குறித்த கணக்குகளில் சரியாகப் பதிந்து அப்பெறுமதிகளின் மொத்தமான ரூபா 28,260 இனை மீண்டும் நானாவித வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 28,260 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகளான ரூபா 16,734 தொகையும் தொலைபேசிக் கட்டணமான ரூபா 980 தொகையும் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களை முடிவுறுத்திய பின்னர் அகற்றல் கணக்கில் காணப்பட்ட ரூபா 44,270 தொகையான நட்டம் முழுவதும் இலாபமாகக் கணக்கில் பதியப்பட்டிருந்ததுடன் நிலையான சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த ரூபா 15,650 தொகை கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர்வேத மருத்துவச் சபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த மருத்துவர்கள், மருந்தாளர்கள், தாதிகள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருந்த பதிவுசெய்யப்பட்டிருந்த மருத்துவர்கள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் ஒவ்வொரு மாவட்டத்தின் படி நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் III ஆம் பகுதியின் 11(I)(உ) ஆம் பிரிவின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவர் களில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த 3 அங்கத்தவர்கள் சபையின் அமைப்பிற்கு உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் இச்சபையின் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்கள் எவரும் உள்ளடங்கியிருக்கவில்லை.

(ஆ) 2005 யூலை 15 ஆம் திகதிய 14/13/08(3) ஆம் இலக்க ஆயுர்வேத மருத்துவ சபை பத்திரத்தின் படி 2006 சனவரி 01 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படும் வகையில் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மருத்துவர்கள் தமது பதிவுகளை நாளதுவரையாக்குதல் வேண்டும். மேலும் இதற்காக பதிவுக் கட்டணம் அறவிடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் இது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சட்டரீதியான தடைகள் காணப்படுகின்றமையால் அது தொடர்பில் திருத்திய சட்ட வரைபொன்று திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திருத்திய நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக 2012 ஏப்ரல் 03 ஆந் திகதி மருத்துவச் சபை தீர்மானம் மேற்கொண்டுள்ளதாக

அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சட்ட வரைபு 2013 யூன் வரை அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது சபை நடவடிக்கைகளின் செயற்பாட்டு விளைவு ரூபா 96,820 தொகையான பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,354,333 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறையில் ரூபா 1,257,513 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. மொத்த வருமானம் முன்னைய ஆண்டின் மொத்த வருமானத்தைக் காட்டிலும் 22 சத வீதம் அல்லது ரூபா 1,260,704 ஆல் அதிகரித்தமையே பற்றாக்குறையின் இவ்வீழ்ச்சிக்கு தாக்கம் செலுத்தியிருந்தது.

### 2.2 விபரமான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான நிதிவிளைவுகள் தொடர்பான விபரமான மீளாய்வின் விபரம் பின்வருமாறாகும்.

| | 2012 ஆம் ஆண்டு | 2011 ஆம் ஆண்டு | (குறைவு)/ அதிகரிப்பு | சதவீதம் (குறைவு)/ அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வருமானம் – அரசாங்க ஏற்பாடு | 4,700,000 | 3,900,000 | 800,000 | 21 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 2,361,369 | 1,900,665 | 460,704 | 25 |

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 7,061,369 | 5,800,665 | 1,260,704 | 22 |
| நிர்வாகச் செலவினம் | 6,809,911 | 6,790,628 | 19,283 | 1 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 348,278 | 364,370 | (16,092) | (5) |
| மொத்த செலவினங்கள் | 7,158,189 | 7,154,998 | 3,191 | 0 |
| வருடாந்தப் பற்றாக்குறை/ மிகை | (96,820) | (1,354,333) | 1,257,513 | 93 |

2012 ஆம் ஆண்டில் மொத்த வருமானம் ரூபா 1,260,704 அல்லது 22% ஆல் அதிகரித்திருந்த போதிலும் மொத்தச் செலவினம் ரூபா 3,191 ஆல் மாத்திரமே அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 மருத்துவர்களைப் பதிவுசெய்தல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| **உடலியல்கூறு** | | | |
| பட்டதாரிகள் | 2,109 | 1,974 | 1,812 |
| டிப்ளோமாதாரிகள் | 5,024 | 4,929 | 4,840 |
| பாரம்பரிய | 5,340 | 5,295 | 5,265 |

**பாரம்பரிய விசேட**

| | | | |
|---|---|---|---|
| பாம்பு விசம் | 3,469 | 3,442 | 3,413 |
| உடைவு முறிவுகள் | 2,182 | 2,138 | 2,108 |
| கண் நோய்கள் | 626 | 625 | 623 |
| தோல் வியாதிகள் | 529 | 528 | 526 |
| வீக்கங்கள் | 360 | 355 | 354 |
| விசர்நாய் | 180 | 180 | 180 |
| எரி காயம் | 80 | 78 | 77 |
| உளவியல் | 149 | 144 | 141 |
| விபத்துக் காயம் | 07 | 07 | 07 |
| ஏனையவை | 658 | 658 | 658 |
| மொத்தம் | 20,713 | 20,353 | 20,004 |

கண் வியாதிகள், தோல் வியாதிகள், வீக்கங்கள், விபத்துக் காயங்கள் போன்ற பாரம்பரிய விசேட மருத்துவர்களின் எண்ணிக்கை 2011 உடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் ஐந்திற்கும் குறைவான எண்ணிக்கையிலேயே அதிகரித்திருந்ததுடன் விசர்நாய், எரி காயம் மற்றும் ஏனையவையின் கீழ் பாரம்பரிய விசேட மருத்துவர்களைப் பதிவுசெய்தல் 2010 இன் பின்னர் இடம்பெற்றிருக்கவில்லை.

முன்னைய ஐந்து ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் மருத்துவர்களைப் பதிவுசெய்தல் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **மருத்துவர்கள்** | **2012** | **2011** | **2010** | **2009** | **2008** |
|---|---|---|---|---|---|
| பட்டதாரிகள் | 135 | 162 | 161 | 190 | 142 |
| டிப்ளோமாதாரிகள் | 95 | 89 | 91 | 72 | 74 |
| பாரம்பரிய | 45 | 30 | 75 | 48 | 58 |
| பாரம்பரிய விசேட | 85 | 68 | 148 | 165 | 129 |
| | 360 | 349 | 475 | 475 | 403 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் டிப்ளோமாதாரிகள் நீங்கலாக ஏனைய அனைத்து தரங்களிலும் மருத்துவர்களைப் பதிவுசெய்தல் 2012 ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்தது.

(ஆ) பாரம்பரிய விசேட மருத்துவர்களைப் பதிவுசெய்தலில் குறைவொன்று வெளிப்பட்டதுடன் அது 2008 ஆம் ஆண்டில் 129 ஆக காணப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டில் 68 வரை குறைவடைந்து 2012 ஆம் ஆண்டில் மீண்டும் 85 வரை அதிகரித்திருந்தது.

(இ) பட்டதாரி மருத்துவர்களைப் பதிவுசெய்தல் 2009 ஆம் ஆண்டில் 190 ஆக காணப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டளவில் அது 135 வரை குறைவடைந்திருந்தது.

### 3.1.2 குழுக்களை நியமித்தல்

பின்வரும் துணைக் குழுக்கள் 2008 முதல் 2012 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அக்குழுக்கள் செயற்படுத்தப்படாமையால் எதிர்பார்க்கப்பட்ட கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) உள்நாட்டு உடைவு முறிவு வைத்தியம் தொடர்பான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

(ஆ) தேசிய பாரம்பரிய அறிவிற்கு உரித்தான தரவு அடிப்படை ஸ்தாபிப்பு குழு

(இ) அருகிப் போகும் எரிகாய வைத்திய முறைமையை பாதுகாக்கும் துணைக் குழு.

(ஈ) பாரம்பரிய மருத்துவர்கள் பதிவுசெய்யும் பாட விதான திருத்தம்

(உ) கால் நடை மருத்துவ முறைமை பாதுகாப்பு தொடர்பான துணைக்குழு

**3.1.3 2012 இன் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்றம்**

2012 இன் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) ஆயுர்வேத மருத்துவ சபையின் சட்டரீதியான சட்டகத்தினை பலப்படுத்தி ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் கட்டளைகளை திட்டமிடுதல் மற்றும் அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) தொழில் சார் அதிகாரத்தினை வழங்கும் செயற்பாட்டை மேம்படுத்தல்

(இ) காணப்படும் தொழில்சார் தகைமையினை அடிப்படையாகக் கொண்டு மருத்துவத் தொழிலாளர்களை உயர்வடையச் செய்தல்.

(ஈ) ஆயுர்வேத தொழிற்துறையில் உள்ளோரிற்கு ஒழுக்கநெறி கைநூலை அறிமுகப்படுத்தல்

(உ) ஆயுர்வேத தொழிற்துறையில் உள்ளோரின் தொழில்சார் நடத்தை/பண்பாட்டினை புலனாய்வு செய்யும் நடைமுறையொன்றை ஏற்படுத்தல்

(ஊ) ஆயுர்வேத மருத்துவ சபையின் வளங்களையும் வசதிகளையும் நாளதுவரையாக்குவதன் மூலம் அதன் செயலாற்றலை மேம்படுத்துதல்.

(எ) ஆயுர்வேத பாதுகாப்புச் சபைகளில் இடம்பெறுகின்ற முறைகேடுகளை குறைத்து சபைகளுடன் நேரடியான தொடர்பினை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஏ) தொழில்சார் அபிவிருத்தி நிழகழ்ச்சித்திட்டங்கள்

(ஐ) விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

(ஒ) உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு ஆயுர்வேத மருத்துவர்கள் தொடர்பான தரவுகளை உள்ளடக்குதல்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கை 20,713 ஆன போதிலும் மருத்துவச் சபையின் உத்தியோகபூர்வ

இணையதளத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த மருத்துவர்களின் எண்ணிக்கை 3000 ஆகும். இவ் இணையதளம் 2010 செப்தெம்பர் 27 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

## 3.2 பதவியணியினர் நிர்வாகம்

ஆயுர்வேத மருத்துவ சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|---|---|
| பதிவாளர் | 01 | 01 | - | 246,300 |
| அலுவலக உதவியாளர் | 09 | 08 | 01 | 2,778,724 |
| தொழிலாளர் | 02 | 01 | 01 | 237,042 |
| | 12 | 10 | 02 | 3,262,066 |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுதேச மருத்துவ அமைச்சினால் ஆயுர்வேத மருத்துவச் சபையின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில்

ஒரு முறை மாத்திரம் சுதேச மருத்துவ அமைச்சால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.2 கணக்காய்வுக் குழு

நிறுவகத்தில் கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் சுதேச மருத்துவ அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் வைத்திய சபை கலந்துகொண்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு

(ஆ) மருத்துவர்கள் பதிவுசெய்யப்படுதலை நாளதுவரையாக்கல்.